செய்தி வெளியீடு எண்: 446 நாள்: 04.08.2009

# எழுதுபொருள் அச்சுத்துறையில் புத்தகம் கட்டுநர் பதவியில் காலிப் பணியிடங்கள் பணிமாற்றல் மூலம் பணியமர்வு செய்தல்.

எழுதுபொருள் அச்சுத்துறையைச் சார்ந்த அனைத்து அச்சகங்களில் காலியாக உள்ள புத்தகம் கட்டுநர் பணியிடங்கள் நேரடி நியமனம் மற்றும் பணி மாற்றல் மூலம் நியமனம் 4:1 என்ற விகிதாச்சாரத்தில் நிரப்பப்படுகின்றன. பணி மாற்றல் மூலம் எழுதுபொருள் அச்சுத்துறையில் பணியுரியும் மஸ்தூர்களுக்கு புத்தகம் கட்டுநர் பதவியில் பணிநியமனம் செய்ய உச்ச வயது வரம்பு தளர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. பணி மாற்றல் மூலம் பதவி உயர்வு பெற தகுதியான கீழ்நிலைப் பதவி மஸ்தூர் ஆகும்.

2) அரசு அச்சகங்களில் பணிபுரியும் மஸ்தூர்களுக்கு புத்தகம் கட்டுநர் பதவிக்கு தகுதியானவர்களை தேர்ந்தெடுக்க, இயக்குநர் அவர்களால் தொழிற் தேர்வு நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெற்ற 49 மஸ்தூர்களுக்கு புத்தகம் கட்டுநர் பதவிக்கு தகுதியுள்ளவர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

3) இவர்கள் அரசு மத்திய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் காலியாக உள்ள புத்தகம் கட்டுநர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

4) இதனால் 49 மஸ்தூர்கள் புத்தகம் கட்டுநர்களாக பதவி உயர்வு பெற்று பயனடைகின்றனர்.

5) இவர்களுக்கான பணி நியமன ஆணையினை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று நேரில் வழங்கினார்.

இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9